திரு. இ. வேணு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மார்க்கெட்டிங் சொசைட்டியில் ஒரு டாங்கர் பாம் ஆயில் வந்து, அதைப் பொதுமக்களுக்கு விநியோகம் செய்யாமல் வெளிச் சந்தையிலே விற்றது அரசுக்குத் தெரியுமா?, ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதோடு தொடர்பில்லாத கேள்வி. அதைப்பற்றி தகவல் இப்போது அரசிடம் இல்லை.

மலைவாழை இனம் நோயினால் பாதிப்பு

*4544. திரு. மு. இராமநாதன் :

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரை மாவட்டம், திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டம் ஆகிய மாவட்டங்களில் மலைவாழை இனம் நூதனமாக ஒரு நோயால் தாக்குண்டு அழிந்து வருவது உண்மையா?

(ஆ) இதைத் தடுத்திட அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) 1976 ஆம் ஆண்டிலிருந்து 1979 ஆம் ஆண்டு முடிய முடிக்கொத்து நோயை அகற்றுவதற்கான "முடிக்கொத்து நோய் ஒழிப்புத் திட்டம்" செயல்படுத்தப்பட்டது. இத் திட்டத்தின் கீழ், நோய் தாக்கிய வாழைகளின் எண்ணிக்கை மற்றும் பரப்பிற்கு ஏற்ப, தேவைப்படும் பூச்சி மருந்துகள் உரங்கள் மற்றும் இடுபொருட்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டம் ஆகிய இந்தப் பகுதிகளைச் சேர்ந்த மலைப் பகுதிகளில் செழித்து வளர்ந்து கனி தந்த மலைவாழை இனம் 10 ஆண்டுகளுக்கு மேலாக இந்த முடிக்கொத்து நோயாலே பாதிக்கப்பட்டு அடியோடு வாழை மரங்களே சாய்ந்து விழக்கூடிய ஒரு கொடுமை இருக்கிறது. மிகப்பெரிய விஞ்ஞானப் புதுமைகளை கண்டுபிடித்து, உலகத்திலேயே கரும்பு இனத்தைக் காப்பாற்றிய பெருமை நம்முடைய வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு உண்டு. ஆகவே, இந்த துறையைச் சேர்ந்த அதிகாரிகள் மூலம் இந்த மலைவாழை இனத்தைக் காப்பாற்றுவதற்கு அரசு ஏதேனும் ஆய்வு நடத்தி இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

1990 ஏப்ரல் 18]

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருமுன் காக்கும் நடவடிக்கையாக நோய் பரப்பும் அசுவினியை ஒழிக்க தாக்காத வாழைகளுக்கு ஊடுருவிப்பாயும் மருந்துகள் ஊசி மூலம் செலுத்தி அசுவினியை கட்டுப்படுத்தும் பணி நடந்துள்ளது. செயல்முறைகளை விளக்கும் பொருட்டு 1 ஏக்கர் பரப்பில் செயல் விளக்கத் திடல்கள் அமைத்து, தொழில் நுட்பங்களை விவசாயிகள் கடைபிடிக்கச் செய்திட ஒரு செயல் விளக்கத்திற்கு ரூ. 340/– மதிப்புள்ள உரங்கள், பூச்சி மருந்துகள் முதலான இடுபொருட்கள் மானியமாக வழங்கப்பட்டுள்ளன. மேலும் அனைத்து விவசாயப் பெருமக்கள் பயனடையும் வகையில் தடுப்புமுறைகள் பற்றிய தொழில் நுட்பங்கள் வானொலியில் ஒலிபரப்பு செய்யப்பட்டு வருகின்றன.

திரு. மு. இராமநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைவாழை இனம் என்று சொல்லக்கூடிய இந்த இனம் இந்திய நாட்டிலேயே மதுரை, திண்டுக்கல்–காயிதே மில்லத் மாவட்டங்களிலேதான் ஒரு சிறப்பு வாய்ந்த தனி இனமாக இருக்கிறது. அமைச்சர் அவர்களே சொன்ன இந்த தடுப்பு ஏற்பாடுகளெல்லாம் பயன் அளிக்காத நிலையில், இந்த இனம் அழிந்துகொண்டுதான் இருக்கிறது. மேலும் இந்த மலை வாழைப்பழத்திற்கு ஒரு வரலாற்றுச் சிறப்பு இருக்கிறது என்பதையும் பழனியம்பதியின் பஞ்சாமிர்தச் சுவையும் இதில் அடங்கி இருக்கிறது.. (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கதை அப்புறம் சொல்லலாம் வினாவைக் கேளுங்கள்.

திரு. மு. இராமநாதன் : பழனியம்பதியின் பஞ்சாமிர்தச் சுவையே இந்த மலைவாழை இனத்தினுடைய எதிர்காலத்திலே தான் இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் மனதிலே கொண்டு, தேன்சுவை தரும் இந்த மலைவாழைக் கனிகளைக் காப்பாற்றிட வேளாண்மைத் துறையின் மூலம் புதிய ஆய்வுகள் மேற்கொள்ள அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, 1978–79 ஆம் ஆண்டின் புள்ளிவிவரப்படி முடிக்கொத்து ஒழிப்புத் திட்டத்தின்கீழ் பாதுகாக்கப்பட்ட பரப்பளவு 14,399.55 ஏக்கர் ஆகும். இத்தகைய பல்வேறு நடவடிக்கைகளின் மூலம் தற்போது 3,000 ஏக்கர் பரப்பளவில் நோய் தாக்குதல் பெரும் அளவில் கட்டுப்படுத்தப்பட்டு சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.